**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 246/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 4 |
| Name : | திருமதி. ராதிகா |
| Father's Name/Husband Name: | திரு. பன்னீர்செல்வம் |
| Village : | பாண்டகபாடி |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 29/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07.04.2026

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 2 முதல் 5 வரை இல்லை. 1ம் எதிரிக்கு எதிராக இவ்வழக்கு Split up செய்து CC 854/2025 என்ற எண்ணில் வழக்கு நிலுவையில் உள்ளது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது பாண்டகபாடி கிராமத்தில் வசித்து இல்லத்தரசியாக இருக்கிறேன். அ.சா.1 எனது அப்பா. அ.சா.2 என்னுடைய கணவர். அ.சா.3 எனது தம்பி. கடந்த 04.11.2021ம் தேதி மாலை 6.30-7 மணியளவில் நான் என்னுடைய வீட்டில் இருந்தேன். அப்போது ஒரு சின்னக்குழந்தை எனது கணவர் மோகன் மளிகை கடை அருகே எனது கணவரை அடிப்பதாக தகவல் சொன்னார். அதனால் நான் அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோருடன் சம்பவயிடத்திற்கு சென்று பார்த்தோம். அப்போது எதிரி என்னை அசிங்கமாக திட்டி எதிரி சசிக்குமார் என்னை அடித்தார்.

சண்டையை தடுக்க சென்ற என் தம்பி அ.சா.3ன் எதிரிகள் அடித்துவிட்டார்கள் எனது அப்பாவின் இடது கை விரலை எதிரி கோபி என்பவர் கடித்து விட்டார். எதிரிகள் அனைவரும் என்னுடைய சேலையை பிடித்து இழுத்து முடியை பிடித்து கீழே

தள்ளிவிட்டார்கள். எதிரிகள் அனைவரும் மது போதையில் இருந்தார்கள். எதிரிகள் எங்களை ஜாதி ரீதியாக பேசினார்கள் நான் கேட்டதற்கு என்னையும் அடித்துவிட்டார்கள். போலிசார் சம்பவயிடத்திற்கு வந்த எங்களை விசாரித்து நடந்ததை கேட்டு எழுதிக் கொண்டார்கள். எனது அப்பாவை மருத்துவமனைக்கு போகச் சொன்னார்கள். என்னுடைய தம்பி அ.சா.1யை பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். எதிரி கண்ணுசாமியை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். அவர் இந்த நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. நானும் என் தம்பி, எனது கணவர் மூன்று மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெறவில்லை. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்கத் தெரியுமா என்றால் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். பாண்டகபாடியிலேயே பிறந்து பாண்டகபாடியிலேயே திருமணம் செய்து கொண்டேன் என்றால் நான் பிம்பலூரில் பிறந்து பாண்டகபாடியில் திருமணம் செய்து கொண்டேன். நானும் எனது கணவரும் தனிக்குடித்தனம் இருக்கிறோம் என்றால் எனது கணவரின் வீட்டில் இருக்கிறோம். எங்களுக்கு குழந்தைகள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். விவசாய வேலை, கூலி வேலைக்கு செல்வேனா என்றால் ஊரில் இருக்கும் போது செல்வேன் தற்போது பாண்டிச்சேரியில் இல்லத்தரசியாக தான் இருக்கிறேன். நல்லது கெட்டது என்றால் தான் எனது அப்பா வீட்டிற்கு செல்வேன் என்றாலும் மற்ற படியில் கணவர் வீடான பாண்டிச்சேரியில் தான் இருப்போம் என்றால் சரிதான். எத்தனை வருடமாக பாண்டகபாடியில் வசிக்கிறோம் என்றால் 23 வருடங்களாக. ஆஜர் எதிரிகள் உள்ளூர்க்காரர்கள் என்பதால் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது கணவரும் ஆஜர் எதிரிகளும் நண்பர்கள் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் வேறொரு பெண்ணிற்காக எதிரிகள் தகராறு செய்தார்கள் என்று சொன்னேன் என்றால் சரிதான். அது என்ன தகராறு என்றால் எனது கணவரின் அண்ணன் மனைவியுடன் மாடு கட்டுவதில் பிரச்சனை இருந்தது. அதற்கு எதிரிகள் நீ ஏன் அவருடன் பிரச்சனை செய்கிறாய் என்று கேட்டு நாங்கள் ஊரிலியே இருக்கக்கூடாது வீட்டைக் காலி பண்ணுங்க என்று சொன்னார்கள். நாங்கள் வீட்டைக் காலி செய்ய மாட்டோம் நாங்கள் வாங்கிய இடத்தில் நாங்கள் வசிப்போம் என்று எதிரியிடம்

சொல்லிவிட்டோம் இந்த பிரச்சனையை மனதில் வைத்துக் கொண்டு எதிரிகள் கடைக்கு சென்ற எனது கணவரிடம் சண்டை போட்டார்கள். எனது கணவரின் அண்ணன் மனைவிக்கும் எங்களுக்கும் தகராறு ஏற்படும்போது எனது கணவரின் அண்ணன் மனைவிக்கு ஆதரவாக எதிரிகள் பேசியது சம்மந்தமாக அவரது அண்ணன் மனைவிக்கு எதிராகவோ அல்லது எதிரிகளுக்கெதிராகவோ போலிசாரிடம் புகார் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. சண்டை நடந்ததாக சொல்லப்படும் நாள் தீபாவளி என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் எனது கணவரின் வீட்டில் தான் இருந்தேன் என்றால் சரிதான். எனது கணவர் காலையில் எத்தனை மணிக்கு வீட்டை விட்டு கிளம்பி போனார் என்றால் காலை 8 மணியிருக்கும். மதியம் சாப்பிட்டிற்கு எனது கணவர் வீட்டிற்கு வரவில்லை என்றால் அவர் போகும்போதே சாப்பாடு எடுத்துக் கொண்டு போய்விட்டார். எங்கு போனார் என்றால் ஆடு மேய்க்கப் போனார். மறுபடியும் எப்போது என் கணவரை பார்த்தேன் என்றால் சண்டை நடக்கும்போது பார்த்தேன். அதற்கு முன்பு நான் எங்கு சென்றேன் என்றால் பிம்பலூருக்கு துக்க காரியத்திற்கு சென்று மதியம் ஊருக்கு வந்தேன். நான் துக்க காரியத்திற்கு சென்ற விவரம் எனது கணவருக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது முதல் விசாரணையில் சண்டை நடந்த விவரத்தை ஒரு சின்ன குழந்தை சொன்னதாக சொல்லியுள்ளேன் அந்த குழந்தை என்ன சொன்னார் என்றால் பன்னீர் அண்ணனை பிடித்து அடிக்கிறார்கள் என்று சொன்னாள். சம்பவ நடந்த இடத்திற்கு எப்படி சென்றேன் என்றால் நடந்தே சென்றேன். எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் மாலை 6.30–7 மணியிருக்கும். சம்பவயிடத்திற்கு செல்லும் போது அங்கு யார் இருந்தார்கள் என்றால் ஊர்ப்பொதுமக்கள் இருந்தார்கள். 100 பேருக்கும் மேல் இருந்திருப்பார்களா என்றால் இருப்பார்கள். நான் அங்கு செல்லும்போது என்ன நடந்தது என்றால் என் கணவரை எதிரிகள் அடித்துக் கொண்டிருந்தார்கள். இந்த விவரம் பொதுமக்கள் அனைவருக்கும் தெரியும் என்றால் சரிதான். எனது கணவருக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். எனது அப்பாவிற்கும் மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். எனது தம்பி ரஞ்சித்திற்கும் மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் அவ்வப்போது எதிரிகளுடன் சேர்ந்து குடிப்பார். எனது குடும்பத்தில் இருப்பவர் மது அருந்திக் கொண்டு தகராறு செய்து கொண்டிருக்கும்போது ஊர்க்காரர்கள் தடுத்ததால் எதிரிகளுக்கெதிராக பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. எனது வீட்டிலிருந்து சம்பவம் நடந்த இடத்திற்கு நைட்டியில் சென்றேன் என்றால் சரியல்ல புடவையில் தான் சென்றேன். எனது முதல் விசாரணையில் சேலையும், ஜாக்கெட்டும் கிழிந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் அப்போது கிழிந்த போன சேலையையும், ஜாக்கெட்டையும் போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் போலிசார் எனது வீட்டிற்கு விசாரிக்க வரும்போது காண்பித்தேன். எதிரிகள் எனது முடியை பிடித்து இழுக்கும்போது முடி வந்துவிட்டதா என்றால் இல்லை. ஜாக்கெட், சேலையை எதுவும் போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையிலும் முதல் மற்றும் குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ளது போல் தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது கணவரின் அண்ணன் மனைவியுடன் உள்ள குடும்ப பிரச்சனையால் தான் எதிரிகளுக்கெதிராக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.